# <u>சிறப்பு கூட்டப்பொருள்</u>

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும் நாகர்கோவில் இந்திய துணைக்கண்டத்தின் தென்கோடியில் அமைந்த நகரமாக விளங்குகிறது. நாகர்கோவில் நகராட்சி திருவிதாங்கூர் சமஸ்தானம் காலத்திலிருந்தே (1919 – 1920) முதல் நகராட்சியாக செயல்பட்டு வந்தது. அரசாணை எண்.1567 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 12.10.1978–ன் படி நாகர்கோவில் நகராட்சி தேர்வுநிலையாக தரம் உயர்த்தப்பட்டது . அரசாணை எண்.535 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 30.05.1988–ன் பிரகாரம் சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வந்தது.

இந்நிலையில் அரசாணை எண்.281 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 09.11.2010 மற்றும் அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (தேர்தல்) நாள் 14.01.2011–ன் படி இந்நகராட்சியுடன் ஆசாரிபள்ளம் பேரூராட்சி, பெருவிளை, வடக்கு சூரங்குடி, காந்திபுரம் மற்றும் கரியமாணிக்கபுரம் ஊராட்சிகளையும் இணைத்து 49.10 சதுர கிலோமீட்டர் அளவிற்கு எல்கை விரிவாக்கம் செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும் தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி மதுரை போன்ற முக்கிய நகரங்களின் வளர்ச்சிக்கு இணையாக நாகர்கோவில் அதன் இயற்கை அமைவிடம் மற்றும் நல்ல காலநிலை காரணமாக வெகுவான மக்கள் குடியேற்றத்துடன் துரிதமான வளர்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் நேர்வில் மத்திய மற்றும் மாநில அரசின் கூடுதல் மானியங்கள் கிடைப்பதுடன் மேலும் நகரின் வளர்ச்சியை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும். மேலும் தற்போது மக்கள் தொகை அடிப்படையில் நாகர்கோவில் நகராட்சி அம்ரூத் திட்டத்தில் உள்ளதால் அத்தியாவசிய பணிகளாகிய குடிநீர், பாதாளசாக்கடை திட்டம் போன்ற பணிகள் அரசு அனுமதி பெற்று நடைபெற்றுவருகிறது. மேலும் மாநகராட்சி அந்தஸ்து பெற்றால் கூடுதலாக அனைத்து பகுதிகளிலும் அனைத்து வகையான அத்தியாவசிய அடிப்படை வசதிகள் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது. மேலும் சீர்மிகு நகரம் ( Smart city) போன்ற அரியதிட்டங்கள் கிடைக்கப்பெற்றால் அனைத்து துறைகள் மூலம் மற்றும் மாநகராட்சி மூலம் நவீன முறையில் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதாலும், இத்திட்டத்தின் மூலமாக தடையற்ற குடிநீர், பாதாள சாக்கடைத்திட்டம், சிறப்பான சாலை வசதிகள், மின்னாற்றல் சேமிப்புடன் கூடிய மின்விளக்குகள், பாலங்கள், மேம்பாலங்கள், நகரை அழகுபடுத்தும் திட்டம், அறிவுசார் போக்குவரத்து வசதி, நவீன

கண்காணிப்பு கட்டுப்பாட்டு தொழில் நுட்ப செயலாக்கம், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் ஆகாயவெளி நடைமேடைபாதை, பலஅு டுக்கு வாகன நிறுத்துமிட வசதிகள் பல்நோக்கு வணிக வளாக மேம்பாடு, ஈரடுக்கு நவீன பேருந்து நிலையம், ஏரி, குளம், கால்வாய் சீரமைப்பு பணிகள் போன்ற இன்ன பிற வளர்ச்சிப்பணிகளை எதிர்நோக்கியும் கடந்த 99 வருடஙகளாக "நகராட்சி" என்ற நிலையிலிருந்து மாநகராட்சியாக மாற்றுவதற்கு அவசிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் 22.09.2018 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டுவிழா அரசு விழாவாக கொண்டப்பட்டது. அந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வார்டு மறுவரையறை பணிகள் முடிந்தவுடன் நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்கள்.

மேலும் தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவறையறை பணிகள் நடைபெற்று வருவதால் நகராட்சியுடன் அருகிலுள்ள வளர்ச்சியடைந்து வரும் உள்ளாட்சிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தும் முயற்சி முழுமை பெறாது. எனவே நகர்மன்ற தீர்மானம் எண்.118 நாள் 28.03.2018 ரத்து செய்துவிட்டு தற்போது உள்ள நாகர்கோவில் நகராட்சியன் தற்போதைய பரப்பளவாகிய 49.10 சதுரமீட்டர் மற்றும் மக்கள் தொகை 2,60,315 இவைகளை கருத்தில் கொண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பின்னர் அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என நகர்மன்ற தீர்மானம் எண்.417 நாள் 04.09.2018 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்நிலையில் 13.02.2019 அன்று நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த சட்ட பேரவையில் (–)சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டு முழுமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை (நிலை) எண்.41 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 28.02.2019 –ன்படி 01.03.2019 முதல் நாகர்கோவில் எல்லை விரிவாக்கமின்றி தற்போதுள்ள 52 வார்டுகளை உள்ளடக்கி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுகிறது என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.எப்.1/12236/1999

**தீர்மானம் எண். 136– அங்கீகரிக்கப்பட்டது.**